பக்கங்கள்: 21

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 22 ஞாயிற்றுக்கிழமை 09.10.2022 கதிர் 336

**இது இரகசியம் அல்ல!**

‘சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுக்கின்ற’ ஆண்டி வேலையைத்தான் பொதுவாக பல அரசியல்வாதிகள் செய்வார்கள். ‘நுணலும் தன் வாயால் கெடும்’ என்பது போல அரசியல்வாதிகளும் தம் வாய்ச்சொல் உத்தரவுகளால் வீணான ☞2

# கால அவகாசம் வேண்டாம்; தக்க நடவடிக்கை எடுங்கள்

## புதிய தீர்மானத்தை வரவேற்ற சம்பந்தன் ஐ.நாவிடம் இப்படி பகிரங்கக் கோரிக்கை



புதிய தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளையும், சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைவிடுத்து இலங்கை அரசுக்குத் தொடர்ந்து கால அவகாசம் வழங்கி வந்தால் அதில் எந்தப் பயனும் இல்லை.


- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். ☞20

## ஏமாற்றுகின்றது சீனா எச்சரிக்கிறார் சுரேஷ்



யாழ் பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகளுக்கான நிதியுதவி என்னும் பெயரில் சீனத்தூதரகம் கடந்த 02.10.2022 அன்று கொழும்பில் உள்ள தனது தூதரகத்தில் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தரிடம் 43 லட்சம் ரூபாவை சீனத் தூதுவரின் புலமைப் பரிசில் திட்டத்தின் ஊடாக வழங்கியுள்ளது. ☞20

## உத்தரதேவி தடம் புரள்வு



நேற்றுக் காலை கங்கேசன்துறையில் இருந்து, கோட்டை நோக்கி சென்றுகொண்டிருந்த ☞20

## 22ஆவது திருத்த வரைவு அரசுக்கு எமகண்டமாம்!

22ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டமூலத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளமையால், அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காப் பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம், எம்.பிக்களான எஸ்.பி. திஸாநாயக்க, கலாநிதி சரத் வீரசேகர உள்ளிட்ட பலர் இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். ☞20

## ரணிலுக்கு மஹிந்தர் முழு ஆதரவு

### ‘ஒன்றாக எழுவோம்’ நிகழ்வில் களுத்துறையில் திடசங்கற்பம்





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது அரசியல் ரீதியாக சரியான பாதையில் சென்று கொண்டிருக்கின்ற நிலையில் அவரது முன்னோக்கிய பயணத்திற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ☞20



## கூட்டு எதிர்ப்புப் பேரணியும் கூட்டமும் மட்டக்களப்பில்!



அடக்குமுறையை நிறுத்து என்ற தொனிப்பொருளில் கூட்டு எதிர்ப்பு பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இந்த பேரணி நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

பயங்கரவாத தடைச்சட்டம் உட்பட அனைத்து வன்முறை சட்டங்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரியே இன்று இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த போராட்டத்தில் தொழிற்சங்கம், பல்லினமக்கள் அமைப்பு மற்றும் ☞2



## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்ச்சைகளை ஏற்படுத்தி, வாங்கிக் கட்டிக் கொள்கின்றார்கள்.

அப்படி ஒரு வேலையை யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் செய்திருக்கின்றார் என்று தெரிகின்றது. தடியை எடுத்து வழமாகக் கொடுத்திருக்கின்றார். வங்கி கட்டுவாரோ தெரியவில்லை.

உலகில் உள்ள நாடாளுமன்றங்கள், சட்டமன்றங்கள், சபைகள், கூட்டங்கள் எல்லாவற்றிலும் ஜனநாயக எதிர்ப்பு வெளிப்பாட்டு முறைமை ஒன்று உண்டு. அது 'வெளிநடப்பு' செய்வது. உலகளாவிய பொது விதிமுறை இது.

சபை அமர்வுக்கு வந்தவர் -சபை பதிவேட்டில் வருகையை ஒப்பமிட்டவர் - சபை நிகழ்வில் கலந்து கொண்டவர் - ஜனநாயக எதிர்ப்பு முறையில் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தார் என்பதற்காக, அவருக்குரிய சபைக் கொடுப்பவை -வேதனத்தை - தடுக்க முடியாது. ஆனால் மறித்திருக்கிறார் யாழ் நகர மேயர். விசித்திரமான நடவடிக்கை. ஓரிருவர் கொடுப்பனவை அல்ல, கூண்டோடு அனைத்து மாநகர சபை உறுப்பினர்களினதும் மாதாந்தக் கொடுப்பனவு மேயர் உத்தரவினால்தடுக்கப்பட்டு இருப்பதாக தெரிகின்றது.

யாழ்மாநகரசபையின்பெரும்பான்மை அணிகள் பிரிந்து நின்றமையால் இடையில் கிடைத்த 'சைக்கிள் கேப்'பில் 'வீணை' வாசித்து மேயர் பதவியை அப்பிக் கொண்டவர் மணி. அப்படித்தான் அவருக்கு அப்பதவி கிட்டியது. தமிழரசுத் தலைவர் மாவையின் தகிடுதம் அணுகுமுறையும் அதற்கு சேர்ந்து உதவியது.

அயோத்தி ராஜ்ஜியம் ராமனுக்குரியது. அல்லது அவனது தம்பி பரதனுக்குரியது. விதி இடையில் வந்த பாதுகைக்கு (செருப்புக்கு) ஆட்சியைக் கொடுத்த மாதிரி இடையில் இப்போது மேயர் பதவி இவருக்கு.

எது, எப்படியோ இப்போது சபையின் அந்திம காலம். இன்னொரு தடவை வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் இவரையும் வந்த வழியில் புறமுதுகிடப் பண்ணலாம் என்றாலும் அதன் பின்னரும் இரண்டு மாதங்கள்தான் இந்த சபையின் பதவிக் காலம் எஞ்சி உள்ளது.

அதனால் இனி வீட்டுக்கு நேரத்துடன் அனுப்ப முயல மாட்டார்கள் என்ற துணிச்சலில் தன் எல்லை மீறிய அதிகார வீம்பைக் காட்ட முயல்கிறார் போலும் மேயர்.

கடந்த 27ஆம் திகதி நடந்த சபையின் கூட்டத்தில் ஆணையாளரதும் மேயரினதும் எதேச்சாதிகார நடவடிக்கைகளைக் கண்டித்து, காரசாரமான விவாதத்தை அடுத்து, சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். அதனால் சபை கோரம் இழந்தது. சபைக் கூட்டத்தை மேயரால் கொண்டு நடத்த முடியாத இக்கட்டு ஏற்பட்டது.

இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக மாகாண சபைகள் அமைச்சு மூலம் சபை அங்கத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவுக்கு தமது அதிகாரத்தை பயன்படுத்தி தடை போட்டிருக்கிறார் மேயர் என அறிய வந்தது.

உரிய கொடுப்பனவு தாமதமின்றி வழங்கப்பட வேண்டும் என்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சம்பந்தப்பட்ட மாகாண சபை செயலாளருக்குப் பணிப்புரை வழங்கியும் விடயம் நடக்கவில்லை, நகரவில்லை என்று தெரிகிறது.

மாநகர சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மேயருக்கு எதிராக ஒன்றுபட்டு இருக்கின்றனர். வெளிநடப்பு என்ற ஜனநாயக உரிமைக்கு 'வேதன வெட்டு' மூலம் ஆப்படிக்கும் மேயரின் எதேச்சாதிகாரத்தை ஆட்சேபித்தே அடுத்த கூட்டத்தின் ஆரம்பத்திலேயே உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்ய நல்ல தடியைத் தூக்கிக் கொடுத்திருக்கிறார் மேயர்.

உறுப்பினர்களின் Money விடயத்தில் மணி விளையாடுகிறார். எனக்கு என்னவோ இது அபாய மணி ஒலிப்பது போல படுகிறது...!

- மின்னல் -

## கூட்டு எதிர்ப்புப் பேரணியும் .........



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசியற் கட்சிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

இந்த போராட்டத்தை அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தொழிற்சங்க மக்கள் அமைப்பின் ஒன்றியம் ஏற்பாடு செய்யப்பட்டது. பேரணியின் முடிவில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

சாணக்கியன் எம்.பி. உட்படப் பலர் இந்தக் கூட்டத்தில் உஅரையாற்றினர்.





இலங்கையின் மறுமலர்ச்சிக்கு உதவுவோம்

இதோ அனைத்து உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கும் ஒரு சிறந்த வாய்ப்பு!!!

சீரழிந்து வரும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க, நீங்களும் உங்கள் உள்ளூர் உற்பத்திகள் மற்றும் சேவைகளை, இலங்கையின் பாரிய நேரடி விற்பனை தளத்தை கொண்ட குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா தனியார் நிறுவனத்தின் ஊடாக சந்தைப்படுத்த முடியும்.

அலுவலக நேரத்தில் +94 76 677 9195 என்ற தொலை பேசி இயக்கத்தின் ஊடாக எங்கள் தயாரிப்பு நிர்வாகியை அழைக்கவும்

Global Lifestyle Lanka

**மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகள் 17.10.2022 ஆரம்பமாகின்றன.**

**Civil Draftsperson (NVQ level 4) course – 1 year**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
**Course leads to:**
» Follow course in NVQ level 5
»Register for drawings at local councils

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*
» Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
»Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw
» Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
»AutoCAD 2D & 3D Modeling
»Java, C++ Programming
» Accounting Package Tally

**Our Civil Draftmanship & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too**

**Certificate in Craft Courses** (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)
» அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும் -Aluminum Fabrication

**மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. (TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Sports**

For More Information : DIRECTOR
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.**
**Tel :0212223382/0212250975 E-mail: ejcit@sltnet.lk**

Search Facebook
V2 Travels and Tours

V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!





VISA

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

0768226244
0768226240

நீங்கள் தொலைபேசியினூடாக இலகுவாக விண்ணப்பிக்கலாம்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தீர்வுப் பாதை எது?

'கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?' – என்பார்கள். அதுபோல, கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேடி போட்டு நோக்கும் கவனிப்பைக் கோருகிறார் போலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

'ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மான விடயத்தில் இலங்கைக்கு மிக நெருக்கமான இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் நடுநிலைமை வகித்துள்ளமை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கத்தின் ஒரு சில செயற்பாடுகளால் சர்வதேசம் இலங்கையைப் புறக்கணிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டின் வெளி விவகாரக் கொள்கை நிச்சயம் மறுசீரமைக்கப்பட வேண்டும்' – என மைத்திரிபால சிறிசேன கூறி இருக்கிறார்.

அவரின் இந்த கூற்றுத் தொடர்பில் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியுள்ளன.

ஒன்று – இலங்கையின் இரண்டு நட்புறவு நாடுகளான இந்தியாவும் ஜப்பானும் உண்மையில் இலங்கையின் செயற்பாடுகள் காரணமாக அந்தப் பிரேரணைக்கு ஆதரவாக – இலங்கைக்கு எதிராக – வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் அவை அப்படிச் செய்யவில்லை. இலங்கை நட்பு நாடு என்ற காரணம் ஒன்று கருதியே அவை நடுநிலைமை வகித்தன. ஏனெனில் இந்தப் பிரேரணை விடயத்தில் இலங்கையின் பக்கம் நியாயம் அவ்வளவு மோசமாக – அநீதியின் பாற்பட்டதாக – இருந்தது என்பது வெள்ளிடைமலை.

அடுத்தது – இந்த விடயத்துக்காக திருத்தப்பட வேண்டியது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கூறுவது போல நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை அல்ல.

நோயின் மூல காரணத்துக்குத்தான் மருந்தைத் தேட வேண்டும். நோயின் குணங்குறிக்கோ அல்லது வெளிப்பாட்டுக் காரணிக்கோ அல்ல.

அது போல, இந்தப் பிரச்சினையில், மனித உரிமைகளை நிலைநாட்டும் விடயத்தில், தனது பௌத்த, சிங்களப் பேரினவாத பேராண்மை வெறிப் போக்கிலிருந்து இறங்கி, நீதி, நியாயமாகச் செயல்படும் வழிமுறைகளை – மார்க்கங்களை – கொழும்பு தேட வேண்டும். அப்படித் தேடி ஓரளவேனும் நீதி, நியாயமாக இலங்கை செயல்பட்டால் மட்டுமே, அதனுடன் நட்பு நாடுகளும், நீதி உரைக்கும் சர்வதேச தரப்புக்களும் அணிசேர முடியும். இதற்கும் வெளி விவகாரக் கொள்கையை மாற்றுவதற்கும் சம்பந்தம் இல்லை.

இலங்கையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டமையே ஜெனிவா நெருக்கடிக்குக் காரணம். அது விடயத்தில் தத்தமது நாட்டில் மோசமான மனித உரிமைகள் நிலைமைகளைக் கொண்ட சீனா, பாகிஸ்தான் போன்றவை அதே தரத்தில் இருக்கும் இலங்கையுடன் அணியெடுத்து நிற்பது புதுமை அல்ல. இனம் இனத்தைச் சேரும்.

ஆனால் மேற்கு நாடுகளும், ஜப்பான், இந்தியா போன்றவையும் அத்தகைய மோசமான மனித உரிமை மீறல் போக்குடன் அணிசேர மாட்டா. அவற்றில் பல இலங்கைக்கு எதிராக வாக்களிக்காமல் நடுநிலை வகித்தமையே கொழும்புக்கு பெரிய சாதகமான – சகாயமான – காரியம் தான்.

ஆகவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரியார் கூறுவது போல, இதற்காக, வெளிவிவகாரக் கொள்கையை மாற்றியமைப்பது தலையிடிக்குத் தலையணை மாற்றும் வேலைதான். இன, மத, மொழி வெறிகளையும், பேரினவாதத் திமிரையும் கடந்து, மனித உரிமை விவகாரங்களை நேர்மையுடன் அணுக – பேண – இலங்கை முன்வருவதே இந்த நெருக்கடிக்குத் தீர்வைத் தேடித் தரும்.

# எந்த வடிவத்தில் எம்மீது ஆக்கிரமிப்புகள் வந்தாலும் எதிர்ப்பை காட்டுவதன்மூலம் தாயகபூமியை காப்போம்!

## சட்டத்தரணி சுகாஷ் சபதம்



எந்த வடிவத்தில் ஆக்கிரமிப்பு வந்தாலும் தொடர்ந்து எங்களது திரட்சியையும், எதிர்ப்பையும் காட்டுவதன் மூலம் மட்டுமே எங்களுடைய தாயக பூமியை பாதுகாக்க முடியும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும், சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார்.

தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை பகுதியில் கொழும்பில் இருந்து வந்த குழு ஒன்று குருந்தூர் மலை பகுதியை ஆக்கிரமிக்க இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து அப் பகுதிக்கு வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து வந்திருக்கின்ற ஒரு விடே குழு எந்தவித முன்னறிவிப்புமின்றி குருந்தூர்மலை தமிழருடைய தாயக பூமியை ஆக்கிரமிக்க இருப்பதாக நம்பத்தகுந்த தகவல்கள் எங்களுக்கு கிடைக்கப்பெற்றதையடுத்து உடனடியாக நாங்கள் இங்கே திரண்டு வந்திருக்கின்றோம்.

நாங்கள் இங்கே வந்ததன் பிற்பாடு அதற்கான ஆயத்தங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன என உணர்கின்றோம். ஆனால் வந்த குழுவினர் இந்த நிமிடம் வரை முல்லைத்தீவிலே முகாமிட்டு இருக்கின்றனர் என நம்பகமான தகவல்கள் தொடர்ந்தும் கிடைக்கபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்களைப் பொறுத்தவரையிலே தமிழர் தாயகத்திலே ஓர் அங்குலமேனும் சிங்கள பௌத்த பேரினவாதம் ஆக்கிரமிப்பதை நாங்கள் ஒருபோதும் அனுமதிப்பது கிடையாது.

தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். எந்த வடிவத்தில் ஆக்கிரமிப்பு வந்தாலும் நாங்கள் தொடர்ந்து எங்களது திரட்சியையும், எதிர்ப்பையும் காட்டுவதன் மூலம் மட்டுமே எங்களுடைய தாயக பூமியைப் பாதுகாக்க முடியும். அந்த வரலாற்று கடமையை தொடர்ந்து செய்துகொண்டே இருப்போம். – என்றார்.

# வெளிநாடு சென்ற பஸில் ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்புவது சந்தேகம்!

## முஜிபுர் ரஹ்மான் கூறுகிறார்



நாட்டின் பொருளாதார பிரச்சினை தொடர்பில் உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கை விசாரிக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது நிலையில் முன்னாள் நிதி அமைச்சர் வெளிநாட்டு சென்றுள்ளார். அவர் மீண்டு நாட்டுக்கு வருவார் என்பது சந்தேகமாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்ற நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக ஜனாதிபதியின் உரை தொடர்பில் ஆளும் கட்சியால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குப் பொறுப்புக்கூறவேண்டும் எனத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானம் வெளிவந்த பின்னர் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டில் இருந்து சென்றுள்ளார். இவர் மீண்டும் திரும்பி வருவாரா என்பது சந்தேகமாகும்.

ஏனெனில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டிருப்பது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அத்துடன் அப்போது இருந்த அமைச்சரவை மற்றும் சில அரச அதிகாரிகளுக்கு எதிராகவாகும்.

அத்துடன் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையிலும் எமது பொருளாதாரத்தில் அரச, அரச அதிகாரிகளின் ஊழல் மோசடி தொடர்பாக சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு எனத் தெரிவிப்பது, ஆட்சியாளர்களாவர். இவர்களின் பொருளாதாரம் தொடர்பான தீர்மானங்கள் காரணமாக மக்களின் மனித உரிமை மீறப்பட்டிருக்கின்றது. அதனால் தான் மனித உரிமை பேரவை இந்த பிரேரணையைக் கொண்டு வந்திருக்கின்றது.

அத்துடன் ஜெனிவாவில் கடந்த காலங்களில் எமக்கு ஆதரவளித்த நாடுகளும் இம்முறை வாக்களிப்பில் இருந்து விலகி இருந்துள்ளன. எமது அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாமையே அதற்குக் காரணமாகும். ஜப்பான் ஆதரவளிக்கும் எனத் தெரிவித்தார்கள். ஆனால் ஜப்பானும் ஆதரவளிக்கவில்லை. அதனால் சர்வதேசத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். உலகை வெற்றிகொள்ளும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றார்.

# காலிமுகத்திடல் கடற்கரைக்கு குளிக்கச்சென்ற சிறுவன் சாவு!

கொழும்பு காலிமுகத்திடல் கடற்கரைக்கு குளிக்கச் சென்ற சிறுவர்கள் 7 பேரில் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை நண்பர்களுடன் நீராடச் சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பு – வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படிகுறித்த பகுதியில் பாதுகாப்பு எச்சரிக்கை பதாகை அகற்றப்பட்ட நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சிறுவர்கள் அனைவரும் கொழும்பு வாழைத்தோட்டம் பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திலீபனை நினைவுகூர்ந்தமைக்காக எனது தனிப்பட்ட முகநூல் முடக்கம்

## சிறிதரன் எம்.பி. சபையில் தெரிவிப்பு

தியாகி திலீபனின் நினைவேந்தல் தொடர்பான படங்களையும் செய்திகளையும் பதிவேற்றம் செய்மைக்காக (2022.09.20) ஆம் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு இயங்க முடியாதவாறு எனது தனிப்பட்ட முகநூல் முடக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் சபையின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்ற ஜனாதிபதியின் விசேட உரை தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு சபையின் கவனத்துக்கு கொண்டு வந்த அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எனது சொந்தப்பெயரில் இயங்கிவரும் எனது தனிப்பட்ட முக நூல் கணக்கில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பான படங்களையும் செய்திகளையும் பதிவேற்றம் செய்மைக்காக (2022.09.20) ஆம் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு இயங்க முடியாதவாறு எனது முக நூல் முடக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் நிலைமாறு கால நீதி பொறிமுறையின் அடிப்படையில் வணக்க முறைகளுக்கு அனுமதி உண்டு.

எனவே அதனை வழங்க வேண்டுமென சர்வதேச சமூகம் கேட்டதற்கு இணங்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முன்னாள் ஜனதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் (2015.11.07) ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின் போதும் இந்த விடயம் ஆராயப்பட்டு வணக்கத்துக்கு தடையில்லை என்ற அனுமதி வழங்கப்பட்ட நிலையிலும் (2022.08.03) ஆம் திகதி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அவரது ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டு அதன்போதும் வணக்க நிகழ்வுகளுக்கு இந்த நாட்டில் தடையில்லை என்று அவரால் தெரிவிக்கப்பட்டு வணக்க நிகழ்வுகள் அனுமதியோடு இந்த நாட்டில் நடக்கும் நிலையில் அத்தகைய செய்திகள், படங்களை பகிர்ந்தமைக்காக எனதும் என் போன்ற பலரினதும் முக நூல் கணக்குகள் முழுமையை முடக்கப்பட்டுள்ளமை எமது கருத்து சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தியள்ளது.

முகநூலை எமது மன உணர்வுகளை வெளிப்படுத்தும் பொது வெளி ஊடகமாகப் பார்க்கப்பட்ட நிலையில் இன்று அரச சார்பான ஊடகமொன்றாகவே பார்க்கும் நிலை உருவாகியுள்ளது. எனவே எனது முக நூல் முடக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கடந்த 22 ஆம் திகதி முக நூல் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடத்தலைவர் அபயரத்னவுக்கு என்னால் மின்னஞ்சல் மூலம் கோரிக்கை முன்வைக்கப்பட்டும் இன்று வரையில் அது தொடர்பில் எந்த பதிலும் வழங்கப்படவில்லை. – என்றார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் பதிலளிக்கையில் முகநூலுக்கும் இலங்கை அரசுக்கும் தொடர்பில்லை. அது வெளிநாட்டு நிறுவனம். எனவே இது சர்வதேசத்தின் தடையே தவிர எமது தடை அல்ல. – என்றார்.

# இராஜாங்க அமைச்சர் டயனாவின் பிரேரணையை வழிமொழிந்தார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி!

சுற்றுலாத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் பதவி விலகல் தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும் என இராஜாங்க அமைச்சர் டயனா கமகே சபைக்கு தெரிவித்த பிரேரணையை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் வழிமொழிந்தர்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்ற நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக ஜனாதிபதியின் உரை தொடர்பில் ஆளும் கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவிக்கையில் –

சுற்றுலாத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தம்மிகா விஜேசிங்கவுக்கு கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக அவர் தவ்போது பதவி விலகியுள்ளார். பெண் என்ற காரணத்தால் அவருக்கு இந்த பதவியில் இருக்க முடியாதா? யார் இதற்கு விருப்பம் இல்லை. பெண்களுக்கு இந்த பதவியில் இருக்க முடியாதா? அதனால் பதவி விலகுமாறு அவருக்கு அழுத்தம் கொடுத்தது யார் என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். – என்றார். இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர் அநுர பிரியதர்னஷயாப்பா தெரிவிக்கையில் –

நீங்கள் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர். விசாரணை நடத்துவதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கின்றது தானே. அதனால் நீங்கள் அதனைச் செய்யுங்கள். – என்றார். இதன்போது எழுந்த தயாசிறி ஜயசேகர, இராஜாங்க அமைச்சர் என்றவகையில் உங்களுக்கு வழங்கப்பட்டி ருக்கும் அதிகாரம் என்ன? அத்துடன் அமைச்சு விடய பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா? எனக் கேட்டார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் டயனா பதிலளிக்கையில், அமைச்சு விடயதான பொறுப்புக்கள் எவையும் வழங்கப்படவில்லை. எந்த அதிகாரமும் எனக்கு இல்லை. என்றாலும் நான் ஆளும் தரப்பில் இருந்து வெளியில் செல்லமாட்டேன். என்றாலும் என்னை அறிவுறுத்தாமல் பணிப்பாளர் நாயகம் பதவி விலகி இருக்கின்றார். அதனால்தான் அதுதொடர்பில் விசாரணை நடத்துமாறு கோருகின்றேன். அல்லது விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் விசாரணை நடத்தவேண்டும் என பிரேரிக்கின்றேன். – என்றார்.

இதன்போது சபையில் இருந்த முன்னாள் ஜனாதிபதி எழுந்து, விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற உங்களது பிரேரணையை எதிர்க்கட்சி என்ற வகையில் நான் வழிமொழிகின்றேன். – என்றார்.





Arunthathee Presents
மாற்று மோதிரம்
BRIDAL FASHION SHOW
EAST 2022
OCT 15 2022
ANJANA GRAND PLACE BATTICALOA

Bridal Fashion Show and Cake Exhibition

Contact us 076 9759197

Main Sponsor: MUBARAK® TEXTILES
Co Sponsor: AZEEF FANCY
Official Sraee Blouse Partners: Mahalaxmi Boutique; RS Designer
Official Photography & Videography: INNOVO STUDIO
Official Sraee Florist Partner: Shan Party professionals

Media Partner: தினகரன்; தினமின; Daily News; SUNDAY OBSERVER; வசந்தம் TV; வசந்தம் FM


# மட்டுநகரில் அருந்ததி வழங்கும்
# BRIDAL FASHION SHOW & CAKE EXHIBITION

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிட த்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரைணயாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் மார்ச் 10ம் திகதி யாழ்ப்பாணத்திலும் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது.

**மணப்பெண் அலங்காரக் காட்சி**
**கேக் கண்காட்சி**
**15 ஒக்டோபர் 2022**
**அஞ்சனா கிரேண்ட் பெலஷில்**

இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ் வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமி ட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மட்டகளப்பு அஞ்சனா கிரேண்ட் பெலஷில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..

## அழகுக்கலை நிபுணர்கள்




## கேக் வடிமைப்பாளர்கள்



# தேசிய சபையின் உபகுழுவின் தலைவராக நாமல் நியமனம்!



தேசிய சபையால் நியமிக்கப்பட்ட குறுகிய,நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான உப குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய சபையின் உப குழு வெள்ளிக்கிழமை கூடிய போது இந்த நியமனம் வழங்கப்பட்டது.

உப குழுவின் தலைவர் பதவிக்கு நாமல் ராஜபக்ஷவின் பெயரை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் முன்மொழிந்ததுடன்,அதனை நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்றி ரஹீம் வழிமொழிந்தார். கொள்கைத் தயாரிப்புத் தொடர்பில் குழுவின் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.


அரச நிர்வாகக் கொள்கைகளை நவீனமயப்படுத்தல், நவீனமயப்படுத்தல், சுகாதாரம் மற்றும் கல்விக் கொள்கைகளை நவீனமயப்படுத்தல், மீன்பிடி, உணவுக் கொள்கைகளை நவீனமயப்படுத்தல், மின்சக்தி மற்றும் வலுசக்தி கொள்கைகளை நவீனமயப்படுத்தல், காலநிலை மாற்றம் தொடர்பான கொள்கைகளை நவீனமயப்படுத்தல், தொழில் முனைவுகள் தொடர்பான கொள்கைகளை நவீனமயப்படுத்தல் தொடர்பில் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள இந்தத் துறைசார் நிபுணர்களை தேசிய சபையின் உபகுழுவுக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் ஆலோசனைகள் மற்றும் யோசனைகளுக்கு அமைய குறுகிய கால யோசனைகளை ஒருமாத காலத்துக்குள்ளும், நடுத்தர கால யோசனைகளை இரண்டு மாதங்களுக்குள்ளும், நீண்டகால யோசனைகளை மூன்று மாதங்களுக்குள்ளும் தேசிய சபைக்கு சமர்ப்பிக்க குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
யாழ்.நகரில் தனி வகுப்புக்கள்
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும்.
G.C.E. O/L English Literature
077 766 8725
யாழ்நகர்.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

STUDY IN INDIA - TAMILNADU
ADMISSIONS OPEN 2022 - 2023
For more details
Call: 076 817 0077 / 021 492 7780
UGC Recognized University Awarded Degree
Excel TAMILNADU, INDIA
A+ NAAC
ENGINEERING [B.E. / B.Tech]
AERONAUTICAL ENGINEERING
CIVIL ENGINEERING
MECHNICAL ENGINEERING
INFORMATION TECHNOLOGY
COMPUTER SCIENCE ENGINEERING
ELECTRONICS & COMMUNICATION ENGG.
COMMERCE
B.Com. | B.Com-CA
B.B.A. | B.Com. (AF)
SCIENCE B.Sc.,
Information Technology
B.C.A. | Computer Science
Mathematics | Physics
Microbiology | Bio-chemistry
ARTS
B.A. English, Tamil
Textile & Fashion Designing | Vis.com.
Costume Design & Fashion
POLYTECHNIC
Eligible with O/L
AUTO | MECH
CIVIL | ECE | EEE
ADMISSION OFFICE
Excel Lanka, 551A, Kasthuriyar Road, Jaffna. ( Near Jaffna Hindu Primary School)



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

| MAIN DIHES | DESSERT | | BEVERAGES | |
|---|---|---|---|---|
| Vegitable Fried Rice with Panner & Ghee - 900/= | ice Cream Cup | - 60/= | jUICE 200 ml | - 70/= |
| Chiken Fried Rice with Vegetable - 1100/= | Fruit Salad | - 60/= | Milk Drink | - 70/= |
| Kothu Rotty With Vegitable in Indian Style | I ce Cream & Fruit Salad | - 100/= | Cocacola M | - 70/= |
| | Cream Caramel | - 120/= | Pepsi M | - 70/= |
| | | | Swchpees Tin | - 250/= |
| | | | Coca Cola Tin | - 250/= |

SPECIAL MENU PACKAGE



# சிறுவர் கதிர்



## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்



## பொறுமைக்கும் நற்பண்பிற்கும் கிடைத்த பரிசு

தொடர்ந்து சில ஆண்டுகளாக மழையே பெய்ய வில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்றனர்.

ஐயா! பெரியவர்களாகிய நாங்கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர், சிறுமியர்கள் என்ன செய்வர்? இந்த நிலையில் நீங்கள் கட்டாயம் உதவி செய்ய வேண்டும் என்று வேண்டினர்.

இளகிய உள்ளம் படைத்திருந்த அவர், இந்த ஊரில் குழந்தைகள்யாரும்பசியால்வாடவேண்டாம். ஆளுக்கொரு மோதகம் கிடைக்குமாறு செய்கிறேன். என் வீட்டிற்கு வந்து மோத கத்தை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்! என்றார்.

மாளிகை திரும்பிய அவர், தன் வேலைக் காரனை அழைத்தார். இந்த ஊரில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொள். ஆளுக்கொரு மோதகம் கிடைக்க வேண்டும். கூடவும் கூடாது, குறையவும் கூடாது. நாளையிலி ருந்து மோதகங்களைக் கூடையில் சரி யான எண்ணிக்கையில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே இரு என்றார்.

மறுநாள், வேலைக்காரன் மோதகக் கூடையுடன் வெளியே வந்தான். அங்கே காத்திருந்த சிறுவர், சிறு மியர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கூடையை அவர்கள் முன் வைத்தான் அவன்.

பெரிய மோதகத்தை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். ஆனால், ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லோரும் எடுத்துச் சென் றது போக, மிஞ்சி இருந்த சிறிய மோதகத்தை எடுத் துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள்.

இப்படியே தொடர்ந்து நான்கு நாட்கள் நிகழ்ந்தது. எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் செல் வந்தர். ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியி ருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு புறப்பட் டாள் அந்த சிறுமி. தன் வீட்டிற்கு சென்றாள், தன் தாயி டம் அதைத் கொடுத்தாள். அந்த மோதகத்தைப் பிய்த் தாள் தாய். அதற்குள் இருந்து ஒரு தங்கக்காசு கீழே விழுந்தது.

அந்தத் தங்கக் காசை எடுத்துக் கொண்டு செல்வந் தரின் வீட்டிற்கு வந்தாள் சிறுமி. ஐயா! இது உங்கள் தங்கக் காசு. மோதகத்துக்குள் இருந்தது. பெற்றுக் கொள் ளுங்கள்! என்றாள். அவள். மகளே! உன் பெயர் என்ன என்று கேட்டார் செல்வந்தர். சிறுமி தன் பெயர் கிருசாம் பாள் எனக் கூறினாள். மகளே உன் பொறுமைக்கும், நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக் காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக் கொண்டு வீட்டிற் குச் செல் என்றார் செல்வந்தர். துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவள், நடந்ததை தன் தாயிடம் சொன்னாள்.

## டைனோசர்



வட சீனாவில் அதிக எண்ணிக்கையிலான டைனோசர் கால்தட புதைபடிமங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. சவுத் சீனா மார்னிங் போஸ்ட்டில் வெளியாகி யுள்ள தகவல்களின் படி, ஆராய்ச்சியாளர்கள் 4,300க் கும் மேற்பட்ட டைனோசர் கால்தடங்களைச் சீனாவின் வடக்கு பகுதியில் உள்ள ஹெபெய் மாகாணத்தில் உள்ள ஜாங்ஜியாகோவில் கண்டுபிடித்துள்ளனர்.

அவை 9,000 சதுர மீற்றர் அளவிலான கால்தடங் கள். ஜுராசிக் மற்றும் கிரெட்டேசியஸ் காலங்களுக்கு இடையில் அல்லது சுமார் 150 மில்லியன் ஆண்டுக ளுக்கு முன்பு உருவானதாக இருக்கலாம் என விஞ்ஞானி கள் தெரிவித்துள்ளனர்.

ஏப்ரல் 2020ம் ஆண்டில் தான், கால் பாதத்தின் இம்ப் ரென்களை உள்ளடக்கிய புதை படிவ கால்தடங்கள் முதலில் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்குப் பின்னதாக தற்போது இப்படியொரு அடையாளங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

டைனோசர்கள் நடந்த வேகம், அவற்றின் நீளம் மற் றும் எடையுடன் சேர்ந்து, பாத தடத்திலிருந்து கண்டறிய முடியும் எனச் சீனா டெய்லி என்ற இதழில் தெரிவித்துள்ளது.

சீனா புவி அறிவியல் பல்கலைக்கழகத்தின் டைனோசர் நிபுணர் ஜிங் லிடா சீனா டெய்லியிடம் அளித்த பேட்டியில், கால்தடங்கள் டைனோசர்களின் வாழ்க்கை பழக்கம் மற் றும் நடத்தையைப் பிரதிபலிப்பது மட்டுமல்லாமல், அந்த நேரத்தில் டைனோசர்களுக்கும் அவற்றின் வாழ்க்கைச்



சூழலுக்கும் இடையிலான தொடர்புகளையும் காட்டுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் வடபகுதியில் கண்டறியப்பட்டுள்ள கால்தடங் கள் நான்கு தனித்துவமான டைனோசர் இனங்களைச் சார்ந்தது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். புதைபடிமங் களில் ஒன்று இன்னும் அடையாளம் காணப்படாத ஒரு இனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று நிபுணர்கள் ஊகித்துள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்ட கால்தடங்கள் தாவர மற்றும் மாமிச டைனோசர்களுக்கு சொந்தமானது என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். மாமிச உண்ணிகளின் கால் அளவு சிறிய தாக இருக்கும் என்றும், அதன் அளவு நான்கு முதல் ஐந்து மீற்றர்கள் மட்டுமே இருக்கும் என்றும் கூறியுள்ளனர். அதேசமயம் தாவர உண்ணி டைனோசர்களின் கால்தடம் கிட்டத்தட்ட 15 மீற்றர் நீளம் வரை வளரக்கூடியவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பகுதி இப்போது உயரமான, பாறைகள் நிறைந்த புல்வெளியாக மாறியிருந்தாலும், டைனோசர்களின் காலத் தில் ஏராளமான நீர் மற்றும் மரங்கள் இருந்ததால், இப்பகுதி டைனோசர்களை ஈர்த்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

பெய்ஜிங்கின் சீனாவின் புவி அறிவியல் பல்கலைக் கழகத்தின் இணைப் பேராசிரியர் ஜிங் லிடா, இந்த பாறை அடுக்கு ஜுராசிக் மற்றும் கிரெட்டேசியஸ் காலங்களுக்கு இடையில் உருவாக்கப்பட்டது என்றும், தற்போது கண்டுபிடிக் கப்பட்டுள்ள கால் தடங்கள் மிகவும் பெரியதாக இருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். விஞ்ஞானிகள் கால்தடங்க ளின் 3ஆம் இமேஜ் மற்றும் அவற்றின் அச்சுக்களை வைத்து ஆய்வு செய்து வருகின்றனர்.

உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் டைனோசர் புதைப்படிவங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தியாவில்,



2014ல், ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய கால்தடங்கள் கண்டுபிடிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தோட்டத்து மண்ணிலே

**தோட்டத்து மண்ணிலே**
**வட்டமான மெத்தையிலே**
**சொகுசா தூங்குறா**
**சின்ன அவரை பாப்பா**
**சொட்டு சொட்டாய் மழை பெய்யுது**
**தட்டி தட்டி எழுப்புது**
**விழிச்சி விழிச்சி பாக்குறா**
**நெலிஞ்சு நெலிஞ்சு வலையுரா**
**வானம் பார்த்து சிரிக்கிறா**
**சின்ன அவரை பாப்பா**

## கரடி மாமா



**குழந்தைகள்:-** கரடி மாமா கரடி மாமா எங்கே போறீங்க?
**கரடி:-** காட்டுப்பக்கம் வீடு இருக்கு அங்கே போறேன்
**குழந்தைகள்:-** கரடி மாமா கரடி மாமா எங்கே போரிங்க?
**கரடி:-** காட்டுப்பக்கம் வீடு இருக்கு அங்கே போரேன்
**குழந்தைகள்:-** கம்பலிச்சட்ட நல்லா இருக்கு யாரு தந்தாங்க?
**கரடி:-** கடவுள் தந்த சொத்துதான் வேர யாருங்க
**குழந்தைகள்:-** கம்பலிச்சட்ட நல்லா இருக்கு யாரு தந்தாங்க?
**கரடி:-**கடவுள் தந்த சொத்துதான் வேற யாருங்க

RADIANT DAWN
A Sunday Supplement in English to Kalaikkathir
Page I English for all Sunday the 9th of October 2022

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

# A Day at Wet World

There was only one week left of summer vacation. Logan was ready to go back to school, but he still wanted to have some summer fun. So he asked his father if the family could spend a day at Wet World. Wet World was a water park about two hours from where Logan lived. He had never been there, but his friends had told him that it was a lot of fun. When Logan asked his father about going, his dad responded, "That sounds like a terrific idea! If you want to, we can invite Kevin."

Kevin was Logan's best friend, so Logan was especially glad that his dad had mentioned him. "I'll call him and ask," Logan said happily. This is going to be a great time, he thought as he picked up the telephone.

**1. In which season does the text take place?**
A. winter B. spring
C. summer D. fall

**2. How does Logan feel when his dad mentions Kevin?**
A. worried B. angry
C. jealous D. happy

**3. Which word has the same root word as especially?**
A. species B. espadrille
C. specialized D. spectator

**4. Which is a synonym for responded?**
A. requested B. answered
C. called D. wondered

**5. What is the name Wet World is an example of?**
A. alliteration B. a simile
C. a metaphor D. personification

Logan checked his backpack carefully. He wanted to make sure he had put in everything he wanted. His dad had agreed to take the family to Wet World for the day. He had even let Logan invite his best friend, Kevin. Logan didn't want to forget anything, so he looked through the things he had put in his backpack. There was a water bottle, a pair of sunglasses, and a camera. That should be enough. Besides, Logan wanted to leave room in the backpack for a souvenir. He wasn't sure if he wanted a T-shirt, a hat, or swim trunks. swim trunks! That was what he had forgotten! Quickly, Logan zipped up his backpack and then swiftly changed into his swim trunks. Now he was ready to leave.

**1. Which item is not in Logan's backpack?**
A. a water bottle B. a T-shirt
C. a pair of sunglasses D. a camera

**2. What is the setting?**
A. at school B. at Wet World
C. in the backyard D. in Logan's room

**3. What is the object of the sentence: Logan checked his backpack carefully.**
A. backpack B. checked
C. Logan D. his

**4. Which two words are synonyms?**
A. quickly and swiftly B. quickly and carefully
C. checked and wanted D. swiftly and ready

**5. Which of these is an example of onomatopoeia?**
A. quickly B. checked
C. zipped D. Wet World



Logan called his best friend, Kevin, with an invitation to a water park. "It'll be great," Logan promised Kevin. Then he added, "My dad says we'll leave in the morning and get to Wet World by about ten thirty. Then we'll have the whole day there, because the park doesn't close until eight."

"Excellent," Kevin said excitedly. "Just hang on a minute while I ask if I can go." Logan agreed; then he heard a dull thud as Kevin put the telephone down. In a few minutes, Logan heard Kevin's voice again. "They're letting me go!" he practically shouted to Logan. Logan was so happy that Kevin's parents had given him permission that he almost hung up. Just in time, he remembered he was still on the telephone.

"This is going to be amazing," Logan said happily.

**1. Why does Logan call Kevin?**
A. to invite him to Wet World
B. to ask for directions to Wet World
C. to get help with homework
D. to ask where Kevin lives

**2. Why are Kevin and Logan both happy at the end?**
A. Kevin won a big prize.
B. They are not going to Wet World.
C. Kevin is allowed to go to Wet World.
D. Logan gets angry at Kevin.

**3. Which definition of the word letting is used in this text?**
A. refusing B. asking
C. allowing D. renting

**4. What does the phrase hang on mean in this text?**
A. to hold something
B. to wait
C. to get through something
D. to dangle

**5. What is the word thud an example of?**
A. a metaphor B. personification
C. a simile D. onomatopoeia

**Fear not to negotiate; negotiate not out of fear- HENRY KISSINGER.**

# A Day at Wet World

Logan's father had taken the family to Wet World, a water park about two hours from where they lived. It had been a long drive, but the family was finally there. Logan was very excited because

his dad had let him bring his best friend, Kevin, along.

Now, the two boys were trying to decide which ride they should visit first. "Let's go on the Giant Slide," Kevin suggested. "It looks like a lot of fun."

"It's kind of crowded, though," Logan pointed out. "We should probably go somewhere else for now and come back to the Giant Slide later."

"I guess so," Kevin agreed.

He and Logan discussed some of the other rides and finally settled on the Wild Raft Ride.

After the Wild Raft Ride, the boys debated whether they should go back to the Giant Slide or try the Super Soak Diving Tower. They chose the diving tower. When they got to the tower, they realized that it was a very long climb to the top. Neither boy wanted to admit feeling scared. But neither boy really wanted to dive from that height. For a minute, they looked at each other. "You go first," suggested Logan."No, you," Kevin insisted.

Suddenly each boy realized that the other was just as nervous. Finally, Logan said, "I'll go if you'll go. Follow me."



"It's a deal," said Kevin.

Slowly and uneasily, Logan and Kevin made their way to the top of the tower. Kevin said, "Go ahead, you can do it!" Logan nodded and, as quickly as he could, stepped to the edge of the diving board and jumped off. Kevin dove right behind him. When the two boys scrambled out of the water, they agreed that they had never had more fun.

"Let's do it again!" smiled Logan.

## Read the text and then answer the questions.

**1. Why don't Kevin and Logan go on the Giant Slide first?**

A. Logan's dad does not want them to go on that ride.
B. They can't find the Giant Slide.
C. They are afraid to go on that ride.
D. The line is too long.

**2. What is likely true about Kevin and Logan?**

A. They are wearing fancy clothes.
B. They are covered with mud.
C. They are covered with snow.
D. They are very wet.

**3. Which purpose for reading is most appropriate for this text?**

A. to be entertained
B. to learn facts about geography
C. to be persuaded to try something new
D. to understand how two things compare and contrast

**4. Which inference can be made, based on the text?**

A. The boys are not nervous after the dive.
B. The water is too cold for diving.
C. The rain is ruining the day.
D. Logan's dad does not want him to dive

**5. Why do you think Logan wants Kevin to follow him?**

A. so Kevin can take a picture of him
B. so he will have more time to practice
C. so he will not feel so nervous
D0 so he can watch Kevin dive first

**6. What is the weather probably like in this text?**

1981இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தனிநாயகம் அடிகளது உருவச் சிலை ஒன்று தமிழகக் கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.


நெடுந்தீவு மக்கள் தமது மண்ணின் மைந்தன் தனிநாயகம் அடிகளுக்கு ஆளுயர சிலை அமைத்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டு தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு நிறைவின் போது யாழ்பாணம் முதன்மை வீதியில் தண்ணீர் தாங்கிக்கு அருகாமையில் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக ஆளுயர சிலை அமைக்கப்பட்டள்ளது.

தனிநாயகம் அடிகளாரின் தீவிர ஆர்வலரும் தொண்டருமாக இன்று வரை செயற்பட்டு வரும் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டுவிழா குழு தலைவர் இந்தியா தமிழ் நாட்டை சேர்ந்த அமுதன் அடிகளாரின் முயற்சியால் தனிநாயகம் அடிகள் ஜேணலிசம் நிறுவனம் 90களின் இறுதிப்பகுதியில் இருந்து திருச்சி மாநகரில் பாரதியார் சாலையில் இயங்கி வருகிறது.

பின்னர் அதற்கு மேவதிகமாக தனிநாயகம் அடிகள் ஜேணலிசம் நிறுவனம் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்று புதுத்தெரு வீதி செப்பாற்று என்ற இடத்தில் இதழியல் இளங்கலைமானி பட்டக்கல்வியையும் வழங்கிவருகிறது.

1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனிநாயகம் அடிகளின் தமிழ்ச் சேவையினை பாராட்டி பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் துணைவேந்தராகப் பணியாற்றியபோது அவருக்கு இறப்புக்குப் பின்னரான கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.




2013ஆம் ஆண்டு தனிநாயகம் அடிகளின் இறப்பின் நூற்றாணடு நிறைவில் (1913 – 2013) தனிநாயகம் அடிகளாருக்கு இலங்கை அரசின் முத்திரை ஒன்றை வெளியிட்டுக் கௌரவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது கைகூடவில்லை.

கனடாவில் தமிழ்ப்பணி ஆற்றும் அமைப்பு ஒன்று தனிநாயகம் அடிகளாருக்கு முத்திரை வெளியிட்டுக்




கௌரவித்தது. இந்த முத்திரை அரசாங்கம் வெளியிடும் முத்திரைக்கு ஈடானதல்ல. இது ஒரு அமைப்புச் சார்ந்தது மட்டுமே.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் மன்றங்கள் – நினைவுப் பேருரைகள் – கட்டடங்கள் என்பன இன்று யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் பல .இடங்களிலும் பாடசாலைகளிலும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக யாழ்ப்பாணம் மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தினாலும் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தழிழ் மன்றத்தினாலும் நடத்தப்படும் நினைவுப் பேருரைகள் குறிப்பிடத்தக்கவை.

கரவெட்டி மண்ணின் மைந்தனாக கனடாவில் வசிக்கும் திருவாளர் அன்ரன் பிலிப் சின்னராசா அவர்கள் யாழ் நகர் பிரதான வீதியில் தனிநாயகம் அடிகள் ஆய்வுமைய ஒன்றை நிறுவி ஒவ்வோர் ஆண்டும் நினைவுப் பேருரை ஒன்றை நடத்தி வருகிறார்.

தனிநாயகம் அடிகள் ஆய்வுமைய பணிப்பாளாராக அமிர்த ஜெயசேகரம் அடிகளார் பணியாற்றுகிறார். துமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் 3ஆம் நினைவுப் பேருரை 'வள்ளுவன் கண்ட தமிழ் தேசியம்' என்ற தலைப்பில் தமிழ்நாடு செ.ரெ.வெனி இளங்குமரன் அடிகளாரால் ஆற்றப்பட்டது. அது தொடர்ந்தும் இன்றும் ஆற்றப்படுகிறது.

கரவெட்டி மண்ணின் மைந்தனாக கனடாவில் வசிக்கும் திருவாளர் அன்ரன் பிலிப் சின்னராசா அவர்கள் 2013ஆம் ஆண்டு தனிநாயகம் அடிகளின் இறப்பின் நூற்றாண்டு நிறைவில் (1913 –2013) தனிநாயகம் அடிகளார் வாழ்வும் பணியும் பற்றித் தயாரித்த போஸ்ரர் படங்கள் பல இந்த ஆக்கத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

தமிழின் தூதுவர் அல்லது அம்பாசடர் ஒப் தமிழ் **(Ambassador of Tamil)** என்பது 2013ஆம் ஆண்டில் வெளிவந்த தமிழ் ஆங்கில ஆவண நிகழ்படம் ஆகும். செந்தில் வீணு அவர்கள் இயக்கிய இந்நிகழ்படம் தனிநாயகம் அடிகளாரின் வாழ்வையும் பணியையும் ஆவணப்படுத்துகிறது.

### வாழ்வின் இரத்தினச் சுருக்கம்

1980ஆம் ஆண்டு தனிநாயகம் அடிகளின் இறுதி அடக்கச் சடங்கில் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் மறைந்த மேதகு கலாநிதி சபாவதி குலேந்திரன் ஆண்டகை தெரிவித்த விடயத்தை தனிநாயகம் அடிகளின வாழ்வின் இரத்தினச் சுருக்க விளக்கமாக இங்கு பதிவிடலாம்.

கடந்த ஆயிரம் ஆணடுகளில் தனிநாயகம் அடிகளாரைப் போல் தமிழுக்குத் தொண்டாற்றியவர் எவருமில்லர் என்பதே அப்பதிவாகும்.

# யாழ். இந்துக்கு உழைத்த சச்சிதானந்தத்துக்கு கொழும்பு பழைய மாணவர்களால் கௌரவிப்பு!








யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ் உலகலாவி, இந்து அன்னை மிடுக்குடன் நிற்கிறாள் என்றால் அதன் பின்னால் பலரது உழைப்பு கல்லூரிக்கு உள்ளும் வெளியும் இருந்திருக்கிறது.

எந்த அளவிற்கு கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள் கல்லூரி மீது பற்றுக்கொண்டிருக்கிறார்களோ அதேயளவுபற்றுடன் இந்துவின் பழைய மாணவர்களும் இருப்பதால்தான் இந்து அன்னை கல்வி உலகிலே வீறு நடைபோட்டுக்கொண்டிருக்கிறாள்.

அப்படி கல்லூரியின் வளர்ச்சியின் பின்னுள்ள பழைய மாணவர்களின் வரிசையில் தன்னையும் இணைத்து பாடுபட்டவர்தான் தம்பிமுத்து சச்சிதானந்தன்.

பட்டயக்கணக்காளரான இவர் 30 வருடங்களுக்கு மேலாக யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பினூடாக இணைந்து இந்துக்கல்லூரியின் உயர்விற்கு பணியாற்றி வந்துள்ளார்.

இவர் நேர்மையையினதும், தன்னலமற்ற சேவையினதும் அடையாளமாக இருந்தமையால் பதவிகள் அவரைத்தேடி வந்தன. யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பினுடைய தலைவராகவும், பின் அதே சங்கத்தின் போசகராகவும், யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய பொருளாளராகவும், பின்னர் அந்த நிதியத்தின் தலைவராகவும் இருந்து வருகின்றமை இவர் ஆளுமைத்திறனுக்கும் நம்பிக்கைக்கும் கல்லூரி மீதான தீராத பற்றுக்கும் எடுத்துக்காட்டு.

தன் சொந்த நிதி மட்டுமன்றி தன் தனிப்பட்ட செல்வாக்கால் பலரது நிதிப்பங்களிப்புகள் யாழ். இந்துக் கல்லூரிக்கு அமைய காரணமாக இருந்தவர் இவர். தமிழ்நாட்டின் பிரபல பாடகர் ஜேசுதாஸனை அழைத்து வந்து கல்லூரிக்காக நிதி திரட்டியதில் இவரின் பங்கும் அளப்பெரியது என்றால் மிகையாகாது.

இவ்வாறாக உணர்வாலும் உழைப்பாலும் யாழ்.இந்துக்கல்லூரிக்கு சேவையாற்றிய தம்பிமுத்து சச்சிதானந்தனின் ஒப்பற்ற பணியைப் பாராட்டி கல்லூரியின் ஸ்தாபக தினமானவிஜயதசமி நாளில் 'மகத்தான விருதினை' வழங்கி வைப்பதில் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பு பெருமையும் பேருவகையும் கொள்கிறது.

## தேசிய சபையின் உப குழுவின் தலைவராக பாட்டலி சம்பிக்க!



துறைசார் நிபுணர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி அந்தந்தத் துறைகள் தொடர்பாகப் பொருளாதார ஊக்குவிப்பு முன்மொழிவுகள் உள்ளடங்கிய அறிக்கையை எதிர்வரும் 20 ஆம் திகதி தேசிய சபைக்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ஸ்தீரத்தன்மைக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்காக தேசிய சபையால் நியமிக்கப்பட்ட உப குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டத்தொகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற உபகுழுவின் முதலாவது கூட்டத்தில் இந்த நியமனம் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன உபகுழுவின் தலைவர் பதவிக்கு பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் பெயரை முன்மொழிந்ததுடன், அதனை நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேன் வழிமொழிந்தார்.

தேயிலை தொழிற்துறையை அபிவிருத்தி செய்தல், பாலுற்பத்தி தொழிற்துறையை மேம்படுத்தல், கைத்தொழில் துறைஷ்யை மறுசீரமைத்தல், உர உற்பத்தி, சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் போன்றவற்றில் புதிய யோசனைகளை உள்வாங்குதல் உட்பட நாட்டின் எதிர்காலத்தைப் பலப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உபகுழுவின் உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

துறைசார் நிபுணர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி அற்தந்தத் துறைகள் தொடர்பாகப் பொருளாதார ஊக்குவிப்பு முன்மொழிவுகள் உள்ளடங்கிய அறிக்கையை எதிர்வரும் 20 ஆம் திகதி தேசிய சபைக்கு சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்திய செலாவணிப் பிரச்சினை,கடன் மறுசீரமைப்புப் போன்ற விடயங்கள் பற்றிய நிபுணர்கள் மற்றும் மத்திய வங்கி, நிதி அமைச்சின் அதிகாரிகளை எதிர்வரும் 13 ஆம் திகதி குழுவிற்கு அழைத்து அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உணவு, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் வலுசக்தி உள்ளிட்ட துறைகளின் நிபுணர்கள் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளை எதிர்வரும் 14ஆம் திகதி குழுவுக்கு அழைத்து அவர்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்ளவும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

பொருளாதார ஸ்தீரத்தன்மைக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான உபகுழு எதிர்வரும் 19 ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளது.



கொழும்பு, புதுச்செட்டித் தெரு சீரடி சாய் பாபா ஆலயத்தில் சீரடி சாயி பாபாவின் மகா சமாதி தினத்தை முன்னிட்டு விஜயதசமி தினத்தன்று எழில் ரத பவனி இடம்பெற்றது.

ஆலய பிரதம அறங்காவலர் எஸ். என். உதயநாயகன், பாபாவுக்கு மலரஞ்சலி செலுத்தி ரத பவனியை ஆரம்பித்து வைப்பதையும் ஊர்வலத்தில் கலந்துகொண்டோரையும் இங்கு காணலாம்.

## வசந்த முதலிகேவுடன் தடுத்துவைக்கப்பட்ட ஹஷான் ஜீவந்த குணதிலகவுக்கு விடுதலை!

### 50 நாள்களின் பின் கிடைத்தது

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெள சிறிதம்ம தேரர் ஆகியோருடன் சி.ரி.ஐ.டி. எனப்படும் பயங்கரவாதத்தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் பொறுப்பில் உள்ள தங்காலை, தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்த ஹஷான் ஜீவந்த குணதிலக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அவர் தங்காலை தடுப்பு முகாமிலிருந்து பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் தங்காலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதன்போது தடுப்புக் காவலில் முன்னெடுத்த விசாரணைகளில் ஹஷான் ஜீவந்த குணதிலகவுக்கு எதிராக எந்த சாட்சியங்களும் வெளிப்படுத்தப்படவில்லை என பொலிஸார் தெரிவித்த நிலையில் அவரது தடுப்புக் காவலை முடிவுக்குக்கொண்டுவருவதாக அறிவித்தனர்.

இதனையடுத்தே அவரை முற்றாக விடுதலை செய்து நீதிமன்றம் அறிவித்தது. அதன்படி கடந்த 50 நாள்களாக தடுப்புக் காவலில் இருந்த ஹான் ஜீவந்த குணதிலக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெள சிறிதம்ம தேரர் மற்றும் ஹஷாந்த ஜீவந்த குணத்திலக்க ஆகிய மூவரையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி அளித்த நிலையிலேயே, அவர்கள் தங்காலை தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதன்படி, அரசுக்கு எதிரான சதிகள் ஏதும் இடம்பெற்றுள்ளதா என சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் சி.ரி.ஐ.டி. எனப்படும் பயங்கர்வாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு ஆகியவற்றுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் இணைந்த பொலிஸ் சிறப்புக் குழுவொன்று விசாரணைகளை முன்னெடுப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ தெரிவித்திருந்தார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது ஐந்து லாம்பு சந்தியில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், அவரோடு ஒன்றாக பயணித்த ஹஷான் ஜீவந்த குணத்திலக்கவும் கைது செய்யப்பட்டார்.

அவர்கள் கடந்த ஓகஸ்ட் 18 ஆம் திகதி முதல், பயங்கரவாதத் தடை சட்டத்தின் விதிவிதாங்கள் பிரகாரம், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் அனுமதியின் கீழான 72 மணி நேர தடுப்புக் காவலின் கீழ், பேலியகொட பொலிஸ் நிலைய கட்டிடத்தில் தடுத்து வைக்கப்பட்டு களனி வலய குற்ற விசாரணை பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வந்தனர்.

கல்வெள சிறிதம்ம தேரர் தலங்கம பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த மூவர் குறித்த விசாரணைகளையும் உடனடியாக சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு கையளிக்குமாறு பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன கடந்த 21 ஆம் திகதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதன்படி சி.ஐ.டி.யினர் முன்னெடுக்கும் விசாரணைகளில், இந்த மூன்று பேரும் அரசுக்கு எதிரான சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்களா என்பது தொடர்பாக அவதானம் செலுத்தி விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸ் மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தவும் ஆலோசனை வழங்கப்பட்ட நிலையிலேயே, சி.ரி.ஐ.டி. மற்றும் சி.ஐ.டி. இணைந்த பொலிஸ் குழுவொன்றூடாக விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 144

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சிங்கள உரிமைகளா, பிரிவினையா என்ற போட்டிகள்

விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளாது நிராகரித்த டோக்கியோ ஜப்பான் சம்மேளனத் தீர்மானங்களை 51 நாடுகளும் 21 சர்வதேச நிறுவனங்களும் ஏற்படுத்தி இருந்தன.

ஆகவே அந்த நிராகரிப்பும் விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக கட்டமைப்பும் அவர்களுடைய (சர்வதேச சமூகத்தினுடைய) வரவேற்பைப் பெறவில்லை.

விடுதலைப் புலிகள் தாங்கள் ஒஸ்லோவில் இணைந்து வெளியிட்ட தீர்மானத்தில் இருந்து வெளியேறி, தனி நாடு அமைப்பதற்கான உத்திகளைத்தான் மேலெடுக்கின்றார்கள் என்று அவை அபிப்பிராயம் கொண்டன.

அதேசமயம் ஜனாதிபதி சந்திரிகா. ரணிலினது அரசை முடக்கியமை நோர்வே அனுசரணையாளர்களுக்கும் சங்கடங்களை ஏற்படுத்தியது. அவர்கள் சமாதான முயற்சிகளில் ஐக்கிய தேசிய கட்சி அமைத்த ரணிலின் அரசோடுதான் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தனர். ஆகவே சடுதியாக அவர்கள் ஜனாதிபதி சந்திரிக்காவின் சுதந்திரக் கட்சியினருடன் – முக்கியமாக தமிழ் மக்களுக்கு எந்தவித அதிகாரங்களையும் வழங்கக்கூடாது என எதிர்த்த மஹிந்த ராஜபக்ஷ, உதய கமன்பில்ல, தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ஸ போன்றோருடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்துவது அவர்களுக்குச் சிக்கலாக இருந்தது. அத்தோடு ஜே.வி.பி. மக்கள ஆதரவை கணிசமாக பெற்று நோர்வே சமாதான பேச்சு வார்த்தைகளை ஆதரிக்காத நிலைப்பாட்டை கொண்டிருந்தது. ஜே.வி.பி. 1990 ஜனநாயக அரசியலுக்கு திரும்பி 1994 இல் ஓர் ஆசனமும், 2000 இல் பத்து ஆசனங்களும், 2001 இல் 16 ஆசனங்களும் பெற்று நாடாளுமன்றத்தில் கணிசமான வாக்குப் பலத்தை ஈட்டி இருந்தது. ஆகவே, விடுதலை புலிகள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை சமர்ப்பித்ததும் அரசாங்கத்தை ஜனாதிபதி முடக்கியமை ஒன்றும் எதிர்பார்க்கப்படாதது அல்ல.

அரசியல் ஆதிக்கம் செலுத்தி வந்த சிங்கள ஆளும் உயரடுக்கு மட்டங்கள் இனப்பிரச்சினையைத் தங்களது வாக்குச்செல்வாக்குக்குப்பயன்படுத்திய துர்ப்பாக்கிய நிலையே தொடர்ந்ததும், இந்த சமாதான ஏற்பாடுகளில் நியாயமான சமரசத்தை அடைவதற்கு குறுக்கே நின்றன.

ரணிலின் அரசு 'குறைந்தபட்சமான நிர்வாகக் கட்டமைப்பை' இடைக்காலத் தீர்வாகச் சமர்ப்பித்த உடனேயே சிங்கள தீவிரவாதிகள் கெம்பி, குழம்பி தமிழர்களுக்கு ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியால் நாடு விற்கப்படுகிறது, 'நாட்டை ரணில், பிரபாகரன், நோர்வேயிடம் இருந்து பாதுகாக்க ஒன்றுபடுங்கள்!' என்ற பிரச்சாரங்களை முன்னெடுத்தனர்.

அத்தோடு, 1996 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் பௌத்த மடத்திலிருந்து சிங்களத் துறவி கங்கொடவில சோமா என்பவர் நாட்டுக்குத் திரும்பி ஸ்ரீலங்காவின் பௌத்தம், இந்து மதத்தின் ஆதிக்கங்களாலும், சர்வதேச கிறிஸ்தவ செல்வாக்குகளினாலும் அதன் புனித தன்மை திரிவு படுத்தப்படுகிறது. ஆதனால் இது அவர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என பல மேடைகளில் பேசியமை ஊடகங்களில் வெளிதுபடுத்தப்பட்டு, மத்தியதரமக்களிடையேபலத்தசெல்வாக்குபெற்றது. 'சிஹல உறுமய'வின் தோற்றம் இந்த அடித்தளத்தில்தான் அமைந்தது.

ரணிலை, சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல விடுவது நாட்டின் இந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தந்தாலும் தனது அரசியலின் இருப்பையும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் எதிர்காலத்தையும் பாதிக்கும் என்பதால் அவரது கட்சியின் அழுத்தங்களுக்கு பணிய வேண்டியவரானார் சந்திரிகா. அவருடைய கட்சியில் இருந்து பிரதமர், ஜனாதிபதி பதவிக்குக் கண் வைத்து இருந்த மஹிந்த ராஜபக்ஷ 26 செப்டம்பர் 2002 அமெரிக்காவில் சமாதான முன்னெடுப்புகள் பற்றி கேட்கப்பட்ட போது "ஜனாதிபதி தேவை வரும்போது தனது அதிகாரங்களைப் பாவிப்பார்" எனத் தெரிவித்தாரே ஒழிய, ஒரு தீர்வை வரவேற்கிறோம் என்ற மனோபாவம் இருக்கவில்லை.

அதேசமயம் அதேபோல் ஜனாதிபதியின் தம்பியார் அனுரா பண்டாரநாயக்கா "எங்கள் தரப்பில் நிறைவேற்ற திகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி இருக்கும் வரை ரணில் நாட்டைப் பிரிப்பதற்கு விடமாட்டோம்" என 26 ஜுன் 2002 'த ஐலண்ட்' பத்திரிகைக்குப் பேட்டிய கொடுத்திருந்தார். இந்த அழுத்தங்கள் தொடர்ந்து எப்பொழுது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் வலிமை பயன்படுத்தப்படும் என சிங்கள ஊடகங்கள் கேள்விகள் எழுப்பியிருந்தன. தனது அரசியல் நலன்களுக்கும் இருப்புக்கும் தருணம் பார்த்திருந்த ஜனாதிபதி சந்திரிக்கா அதனை 4 நவம்பர் 2003 விடுதலைப் புலிகளின் இடைக்கால கட்டமைப்பு – அதுவும் அதியுச்ச பட்சத்தில் வைக்கப்பட்ட போது – அதனைச் செய்தார்.

பின்னர் போர் முடிந்திருந்த காலங்களில் நோர்வே அனுசரணையாளர்களைச் சந்தித்தபோது, 9 ஜுலை 2011இல், முன்னைய ஜனாதிபதி சந்திரிகா தான் அப்படி அரசை முடக்குவார் என ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்க்கவில்லை, நான் முழு அரசையும் 4 நவம்பர் 2003இல் கலைத்து விடவில்லை, ஆனால் என்னால் முடியும் என்ற அதிகாரத்தை நடத்திக் காட்டவே அதனை செய்தேன்' – என எதுவித மனக்கிலேசமும் இன்றித் தெரிவித்தார்.

நாட்டில் புரையோடிக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முறைகள் ஜனாதிபதிக்கு முக்கியமாகப் படவில்லை. ஆனால் அதிகாரப் போட்டியும் தனது அரசியலைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய தேவையுமே மேலோங்கி நின்றன

### அரசியல் அதிகாரங்களின் நிலைகள்

ஜனாதிபதி ஒருவரின் கையில் நிறைவேற்றதிகாரங்களும், அதே சமயம் சட்டங்களை ஆக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்குமாக இரண்டுக்கும் இடையே முரண்பட்ட நிலைப்பாடு நீடிக்க, சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு முகம் கொடுத்து முன்னெடுத்த ரணில் அரசு காணப்பட்ட இணக்கங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய அதிகார பலமின்றி இருந்ததை சமாதான பேச்சுக்களில் ஈடுபட்டவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி மக்களிடையே இடைக்கால தீர்வு தேவை எனக் கோரி மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் அரசை அமைத்தாலும், அதன் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த அதிகாரம் கொண்டதாக இருக்கவில்லை.

ஜனாதிபதியும் அவரது கட்சியும் அரசுத் தரப்புடன் இணைந்து, ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக – அனுசரணையாக – முன்னேறி இருந்தால், நிலைமை வேறு மாதிரி இருந்திருக்கும். ஆனால் கட்சி நலன்களின் நோக்கத்துனால் அப்படியான அனுசரணைகள் இருக்கவில்லை.

நாட்டில் அமுலில் இருந்த அரசமைப்புச் சட்டம் அது ஒற்றை ஆட்சியை அடிப்படையாகக் கொண்டதும், ஜனாதிபதியின் அதிகாரங்கள் இராணுவத்தின் மேல் அவருக்கு இருந்த ஏகபோக வலிமை இவையெல்லாம் நாடாளுமன்ற அரசினாலும் காத்திரமான புதுமையான இணக்கங்களுக்கு இடம் அளிக்கக் கூடியவற்றை நடைமுறைப் படுத்த வழிமுறைகள் தரவில்லை. அந்த வழிகளில் ரணிலின் அரசு, விடுதலை புலிகள் என இரு பகுதியினரும் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக அமைப்புகள் மேலும் பார்வையிட முடியாத நிலைகளில் அரசியல் போட்டிகளால் முடங்கி கிடந்தன. இனப் பிரச்சினைக்கான தீர்வுக்குத் தேவையான வட, கிழக்கு ஒருங்கிணைந்த பகுதிகள், அதற்கான அதிகார வரம்புகள் புனர்வாழ்வுக்கும், கட்டுமானங்களுக்கும் தேவையான அமைப்புகள் என்பன பற்றி தங்களது நாடாளுமன்ற பெரும்பான்மையைக் கொண்டு தீர்மானங்களையும் சட்டங்களையும் ஆக்கி, அவற்றை முன்னெடுக்க ரணில் விக்கிரமசிங்க துணிவுகொள்ளவும் இல்லை. அவை அரசியல் ரீதியாகத் தனக்கு எதிராகப் பாவிக்கப்படலாம் என கருதி அதில் அவர் ஆர்வம் காட்டவும் இல்லை. அவரது திட்டமாகத் தான் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றால் தனக்கு இருக்கும் நடைமுறை அதிகாரங்களைக் கொண்டு அவற்றை ஆக்கிக் கொள்ள முயல்வதுதான்.

ஆனால் வடக்கு கிழக்குப் பகுதிகளின் வாழ்வாதார நிலைமைகள், விடுதலை புலிகளை தேர்தல் முடியும் வரை பொறுமை காக்க விடவில்லை. அதே சமயம் ரணில் விக்ரமசிங்கவை வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ் பிரதேசத்திற்கோ அதற்கான அதிகாரங்களுக்கு ஆதரவானவராகவோ விடுதலைப் புலிகள் அவரைப் பார்க்கவில்லை.

தற்சமயம் ரணில் விக்ரமசிங்க நிறைவேற்றதிகாரம் உள்ள ஜனாதிபதியாக – ஆனால் அவரது கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்டதாக இல்லாமல் – சிங்கள பேரினவாதத்தைத் தங்களது உயிர் நாடியாகக் கொண்டிருக்கும் ராஜபக்ஷ தரப்புகளின் அனுசரணையில் பதவியில் இருக்கிறார். இது காலங்களின் கோலம். இவை பயனுள்ள முறைகளில் அமையுமா என்பதை வரும் காலம் தான் சொல்ல வேண்டும். ஆனால் நோர்வே சமாதான முன்னெடுப்புகள் இப்படியான அரசியலின் பாம்பு, ஏணி விளையாட்டுக்களால் முன்னேற முடியாமல் தேங்கின. அது வரை போர் நிறுத்த ஒப்பந்தம்தான் அதன் வெற்றியாகப் பார்க்கப்பட்டது. அதுவும் தழும்பும் நிலைகள் மிக வேகமாக எழுந்தன. அது எப்படி என்பதை இனிக் கவனிக்கலாம்.

(வளரும்....)

காலைக்கதிர்
Kalaikkathir

### ஏமாற்றுகிறது சீனா .................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது, தானே அடித்து காயப்படுத்தி விட்டு அந்த காயத்திற்கு தானே பொருத்தமற்ற மருந்தையும் இடுவதுபோல் உள்ளது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இந்த நிதி உதவி குறித்து தனது சந்தேகத்தையும் அவர் வெளியிட்டுள்ளார். அதற்கான காரணங்களையும் விளக்கி ஊடக அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:-

தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசு கட்டவிழ்த்துவிட்ட யுத்தத்திற்கு உறுதுணையாக இருந்து, இலங்கை அரசாங்கத்திற்கு கடன் அடிப்படையில் பல்லாயிரக் கணக்கான கோடி பெறுமதியான யுத்த தளபாடங்களைக் கொடுத்து, தமிழ் இன வழிப்புக்கு உடந்தையாக இருந்து செயற்பட்டதில் சீனாவிற்குப் பாரிய பங்கு இருக்கின்றது.

இந்த யுத்த அழிவுகளுக்குப் பின்னர், சர்வதேச அரங்குகளில் இலங்கை அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்கள், இனப்படுகொலை போன்ற குற்றங்களிலிருந்து இலங்கையைக் காப்பாற்றுவதற்காக தொடர்ச்சியாக சீன அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தில் இன்றும்கூட இலங்கை தமிழ் மக்களுக்கு எதிராகவும் இனவாத சிங்கள அரசிற்கு ஆதரவாகவும் சீனா செயற்பட்டு வருவதைப் பார்க்கின்றோம்.

இப்பொழுது சீன அரசாங்கம் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் மீது கரிசனை உள்ளதுபோல் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றது. வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் மீதும் தமிழ் மாணவர்கள் மீதும் என்றுமில்லாத வகையில்தான் அக்கறையுடன் இருப்பதாகவும் காட்டிக்கொள்கின்றது. சீனாவின் இரட்டை வேடம் குறித்து ஒகஸ்ட் 31ஆம் திகதியன்று யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆழ்ந்த வருத்தத்துடன் தமது கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளது.

அதுமாத்திரமல்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகளை உள்ளடக்கிய ஜனநாயகப் போராளிகள் கட்சியும் சீனாவின் ஆக்கிரமிப்புகளையும் வடக்கு மாகாணத்தில் அதன் தேவையற்ற தலையீடுகளையும் கண்டித்திருக்கின்றது.

சீன அரசைப் பொறுத்தவரையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பல்லாயிரம் கோடி ரூபா. பெறுமதியான வேலைத் திட்டங்களை தன்வசப்படுத்துவதும், அதனூடாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதும் அதன் நோக்கமாக இருக்கின்றது. மீனவர்களுக்கு உதவி செய்கின்றோம் என்ற போர்வையில் அவர்களுக்கு சில உலர் உணவுப் பொதிகளைக் கொடுப்பதும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவி செய்கிறோம் என்ற போர்வையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கும் சில லட்சரூபாக்களைக் கையளிப்பதும் அதனூடாக தமிழ் மக்களுக்கு தான் உதவிகரமாக, ஆதரவாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதும் தமிழ் மக்களை மிகமோசமாக ஏமாற்றும் ஒரு செயற்பாடாகும்.

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை உள்நாட்டு விவகாரம் எனக் கூறும் சீன அரசாங்கம், 2016ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மாணவர்களுக்கு ஏதோ உதவி செய்வது போலவும் அதனடிப்படையில் 2022ஆம் ஆண்டு இன வழிப்பு யுத்தத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழகமாணவர்களுக்கு உதவிசெய்வதாகக் கூறுவதும் பாதிக்கப்பட்ட மாணவர்களை மேலும் அவமானப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. இதுதான் சீனாவின் உண்மையான முகம். பல்வேறுபட்ட ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் சீனா இதே நடவடிக்கையையே கைக்கொள்கின்றது.

உண்மையாகவே சீன அரசாங்கத்திற்கு வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் மீதோ அல்லது இலங்கையின் மீதோ பரிவோ பாசமோ கிடையாது. இலங்கை மிகமோசமான பொருளாதார வங்குரோத்து நிலையை அடைந்தது மாத்திரமல்லாமல், அது வேண்டிய சர்வதேச கடன்களை உரிய கால தவணைக்குள் செலுத்த முடியாதென்பதையும் வெளிப்படுத்தியிருக்கின்றது. அதன் பிரகாரம் தனது கடன்களை மீளச் செலுத்துவதற்கு கடன் வேண்டிய நாடுகளிடம் கடனை மீளச்செலுத்துவதற்கு மறுசீரமைப்பு செய்து தருமாறு கோரியிருந்தபொழுதும்கூட சீன அரசாங்கம் இன்றுவரை அதற்குச் சாதகமான பச்சைக் கொடியைக் காட்டவில்லை.

யுத்தத்திற்குப் பின்னர், வீடுகளை இழந்த வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை இந்திய அரசாங்கம் கட்டிக்கொடுத்தது. பல பாடசாலைகள் அந்நாட்டு நிதியுதவியுடன் புனர் நிர்மாணம் செய்யப்பட்டன. வடக்கு மாகாண ரயில் பலநூறுகோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மிகப் பிரமாண்டமான கலாசார நிலையம் ஒன்று இந்திய அரசால் அமைக்கப்பட்டது. மாணவர்களுக்கான பல்வேறுபட்ட புலமைப் பரிசில் திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. உலகத்தரம் வாய்ந்த இந்தியன் இன்ஸ்டியூட் ஒவ் டெக்னாலஜி (ஐஐரி) தனது தொழில்நுட்பக் கல்விச் செயற்பாடுகளை வடக்கு மாகாணத்திற்கு விஸ்தரிப்பதற்கும் தயாராக இருக்கின்றது. இவ்வாறு பல்வேறுபட்ட உதவிகளை இந்திய அரசாங்கம் செய்து வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில், இந்தியாவின் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் எல்லைப் பிரச்சினையில் ஈடுபட்டுவரும் சீன அரசாங்கம், தென்பகுதியில் இந்தியப் பெருங்கடல் பிரதேசத்திலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி இந்தியாவை அச்சுறுத்த முயற்சிக்கின்றது. இதற்கு இலங்கையின் வடபுலத்திலும் இந்தியாவின் தென்புலத்திலும் இருக்கும் ஈழத்தமிழர்களை சீன அரசாங்கம் பகடைக்காயாக பயன்படுத்த முயற்சிக்கின்றது. இந்த முயற்சியை எந்தவொரு சந்தரப்பத்திலும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதுடன் ஏமாற்றுத்தனமான இத்தகைய நடவடிக்கையை சீன அரசு கைவிட வேண்டும் என்றும் கோருகின்றோம்.

ஈழத் தமிழர்களாகிய எமக்கு வடக்கில் பாக்கு நீரிணைக்கு அப்பால் இருக்கும் இந்தியாவில் எட்டுகோடி தமிழர்கள் உட்பட 130கோடி மக்கள் வாழ்கின்றனர். இப்பிரதேசத்தில் சீனாவின் ஊடுருவலானது எமது இரத்த உறவான இந்திய மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்பது வெளிப்படையாகத் தெரிந்தவிடயம்.

சீனாவினால் உதவிகளைவிடவும் தமிழ் மக்களுக்கு ஆபத்துகளே அதிகம் என்பதை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அனைவரும் நன்கறிவர். இந்த நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களே விரும்பி ஏற்காத உதவித் தொகையை யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சி.சற்குணராஜா, யாழ் பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி.ராஜ் உமேஸ், சீனத்தூதுவர் நிதியுதவிக்கான யாழ் பல்கலைக்கழக இணைப்பாளர் கலாநிதி மு.தணிகைச் செல்வன் ஆகியோர் கொழும்பில் உள்ள சீன உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு நேரில் சென்று 43 லட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்ட செயலானது தமிழ் மக்களின் உணர்வுகளையும் குறிப்பாக யாழ் பல்கலைக்கழக மாணவ சமூகத்தையும் நீதிக்காக வீதியில் இறங்கிப் போராடிவரும் தமிழ் மக்களையும் அவமதிக்கும் செயலாகும்.

கல்வி அபிவிருத்திக்காக கிளிநொச்சியில் பொறியியல் பீடத்திற்கான கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கும் அப்பீடக் கற்கைநெறிக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் பல கோடி ரூபாய்களை இந்திய அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த நிலையில் சீனா எமது பிரதேசத்தில் மேற்கொள்ளும் உதவிகளின் பின்னால் உள்ள உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டும் அதனிடம் உதவிகளைப் பெற்றுக்கொள்வது கல்விமான்களுக்கு அழகானதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

பொருளாதார ரீதியிலும் இராணுவ ரீதியிலும் சீனா ஒரு வல்லரசாக தோற்றம் பெற்று வருகின்றது. அதனடிப்படையில் அது இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருப்பதால் அதனை தனது சொந்த நலன்களுக்காகப் பாவித்துக் கொள்வதற்கான தொடர்ச்சியான முயற்சிகளை சீனா மேற்கொண்டு வருகின்றது. இந்து சமுத்திரப் பிராந்தியம் என்பது சமாதானத்துடனும், அமைதியுடனும் பாதுகாப்புடனும் இருக்க வேண்டும் என்று நேருவின் காலத்திலிருந்தே வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் சீனா இலங்கையின் வடபகுதிக்குள் ஊடுருவுவது என்பது எவ்வளவு தூரம் பாரிய உள்நோக்கங்களை சீனா கொண்டிருக்கின்றது என்பதை நாம் அனைவரும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். எமது மக்களின் எதிர்கால நலன்களை எந்த நேரத்திலும் நாம் மறந்துவிடக்கூடாது என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். - என்று அதில் உள்ளது.

### கால அவகாசம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழ் ஊடகங்களிடம் நேற்றுக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் புதிய தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் வரவேற்கின்றோம்.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமாக இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இந்தத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

அதேசமயம் சாட்சியங்கள் சேகரிக்கும் பொறிமுறை அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும், விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இந்தத் தீர்மானம் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இதை நாங்கள் வரவேற்கின்றோம்.

இந்தநிலையில், புதிய தீர்மானத்தியுள்ள பரிந்துரைகளையும், சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதைவிடுத்து இலங்கை அரசுக்குத் தொடர்ந்து கால அவகாசம் வழங்கி வந்தால் அதில் எந்தப் பயனும் இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் இதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசும், அதன் படைகளும் எதிர்கொண்டுள்ளன. எனவே, குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்க வேண்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இவை நிறைவேற ஐ.நாவையும், அதன் உறுப்பு நாடுகளையும் தமிழர்கள் நம்பியுள்ளார்கள் - என்றார்.

### ரணிலுக்கு மஹிந்தர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஒன்றாக எழுவோம் - களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம்' என்ற பொதுக் கூட்டத்தில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டம் நேற்றுக் காலை நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டவை வருமாறு:-

ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத் திட்டம். அப்போது ரணிலை நாம் திட்டினோம் - ரணில் ஐ.தே.க. காரர் என்று. இப்போது ரணில் எங்களுடன் இருக்கிறார். தற்போது நாம் ரணில் சிறந்தவர் என்கிறோம். அவர் இப்போது சரியான பாதைக்கு திரும்பிவிட்டார் என்று நம்புவதால்தான் நாங்கள் அவருக்கு ஆதரவளித்து இந்த பயணத்தைத் தொடர உதவுகிறோம்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தற்போது பல சவால்களை எதிர் நோக்குகிறது. அவற்றை வென்று வர எம்மிடம் போதுமான பலம் உள்ளது.

"மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை சிறிலங்கா பொதுஜன பெரமுன முன்னெடுக்கும். பொது மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை பூர்த்தி செய்வதே அரசாங்கத்தின் கடமை.

"இலங்கையின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு தேவையான ஆதரவை வழங்க சிறிலங்கா பொதுஜன பெரமுன ஏற்கனவே பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளது. எதிர்காலத்தில் மேலும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தக் காத்திருக்கிறது.

"இவ்வாறான திட்டங்களை முன்னெடுக்க சிறிலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும்.

"அதிபர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் அதன் உறுப்பினர்கள் முழு ஆதரவையும் வழங்குவார்கள் என்றார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கிய இந்தக் கூட்டத்தில், பிரதமர் தினேஷ் குணவர்தனவும் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ, தற்போதுள்ள அமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்றுக்கொள்கிறது என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு பங்களித்த இளம் தலைமுறையினரால் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### 22ஆவது திருத்த வரைவு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சி எம்.பிகள் கூட்டத்திலும் நீதியமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற விளக்களிக்கும் நிகழ்விலும் உத்தேச அரசமைப்பு வரைவுக்கு பல எம்.பிக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இவ்விரு கலந்துரையாடல்களிலும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவைத் தவிர வேறு எவரும் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக கருத்துத் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் முதலில் கடந்த 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட இருந்த இந்த சட்டமூலம் எதிர்ப்பு காரணமாக, அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. எனினும், அடுத்த வாரம் விவாதம் நடத்தி நிறைவேற்றுவதும் சிக்கலாக மாறியுள்ளதாகத் அறிய முடிகிறது.

### உத்தரதேவி தடம் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரதேவி ரயில் தம்புத்தேகம மற்றும் செனரத்கம ரயில் நிலையத்துக்கு இடையே தண்டவாளத்தில் இருந்து விலகி தடம் புரண்டுள்ளது.

இதனால் 150 மீற்றருக்கு கொங்கிறீட் சிலிப்பர் கட்டைகள் சேதமடைந்துள்ளன. ரயிலின் முன்பக்க இயந்திரப் பெட்டியும் மற்றுமொரு பெட்டியும் தடம் புரண்டுள்ளன

இதன் காரணமாக வடக்குப் பாதையில் ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது

# இந்தியாவின் ஜெனிவா நிலைப்பாடுகள் தமிழரை வருத்தமடையச் செய்துள்ளது

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வேதனை



இந்தியா தமிழர்களை கொச்சைப்படுத்துவதுடன், தமிழர்களுக்கு ஒருபோதும் உதவாது என்பதை தமிழர்கள் உணர வேண்டும் எனக் காணாமல்போனவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து அவர்கள் தெரிவிக்கையில் –

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தீர்மானத்தின்மீதான வாக்கெடுப்பில் இருந்து இந்தியா மறைந்து போனது. இது எங்கள் தாய்மார்களை வருத்தமடையச் செய்துள்ளதோடு ஒரு நண்பருக்கு உதவி தேவைப்படும்போது, ஓர் உண்மையான நண்பர் உதவுவார். ஆனால் இந்தியா ஒரு நண்பன் அல்ல என்பதை நமக்குக் காட்டியிருக்கிறது.

இந்தியாவை ஆதரித்து பாதுகாக்கும் தமிழ் அரசியல்வாதிகளும் முகவர்களும் தங்கள் சிந்தனை சரியா என்பது பற்றி தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே அடிமைப் பொருளாதாரம், ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறை ஆகியவற்றிலிருந்து எங்களை விடுவிக்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை அழைப்பது தான் ஒரே வழி என்பதோடு பொது வாக்கெடுப்புக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வசதி செய்து தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மண்ணெண்ணெயில்லை கடல் தொழில் பாதிப்பு!

### மீனவ குடும்பங்கள் போராட்டம்



மண்ணெண்ணெயில்லாத காரணத்தால் கடல் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீனவ குடும்பங்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கிவருகின்றன என மீனவ குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

கௌரவமான அரசியல்தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து, 100 நாள்கள் செயல்முனைவின் 69 ஆவது நாள் போராட்டம் நேற்று (சனிக்கிழமை) மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளா பிரிவுக்கு உட்பட்ட மீனவர் வீட்டுத்திட்ட பகுதியில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டவர்கள் ஒன்று கூடுவது எமது உரிமை , கருத்துச்சுதந்திரம் எமது உரிமை, வடக்கு கிழக்கில் உள்ள மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைத் தாருங்கள் போன்ற கோஷங்கள் எழுதப்பட்ட பதாகைகளை போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

மேலும் இந்தப் போராட்டத்தில் செயற்பாட்டாளர்கள், இளைஞர் கழக மற்றும் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாளை திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறை

இலங்கையில் நாளை (திங்கட்கிழமை) விடேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நபிகள் நாயகத்தின் பிறந்த தினம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடப்படுகின்றது.

இதனை முன்னிட்டு ஒக்ரேடாபர் 10ஆம் திகதி திங்கட்கிழமை விடேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து இந்தியாவுடன் இலங்கை ஆராய்வு!

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக முதன்மைச் செயலாளர் ராகேஷ் பாண்டே ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துதல், விவசாயத்துறை, வெளிநாட்டு கையிருப்பை பராமரிக்க ஏற்றுமதி உற்பத்தி நிறுவனங்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் மற்றும் சில இறக்குமதிகள் நிறுத்தப்பட்டதன் மூலம் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ளதாக்கம் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.



அத்தியாவசிய உணவுப் பொருள்களை நுகர்வோருக்கு குறைந்த விலையில் வழங்குவதற்கு அமைச்சு கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பல வர்த்தக உடன்படிக்கைகள் முடிவுக்கு வரவில்லை எனவும் இந்த முரண்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்ய அமைச்சரவை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 2 லட்சத்து 30 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வேலைகளுக்காக வெளிநாடு சென்றுள்ளனர்!

இலங்கையில் இருந்து 2 லட்சத்து 30 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வெளிநாடுகளில் வேலைக்காக சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அவர்கள் வெளிநாட்டு வேலைக்காக சென்றுள்ளனர் என அதன் ஊடகப் பேச்சாளரும் பயிற்சித் திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளருமான ஜி. எஸ். யாப்பா ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அவர்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஜப்பானிலும் இலங்கை தொழிலாளர்களுக்கு பல வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சைக்கிள்கள் மற்றும் எரிவாயு சிலிண்டர்களை திருடிய ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது!

யாழ். மானிப்பாய் மற்றும் சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளில் சைக்கிள்கள் மற்றும் எரிவாயு சிலிண்டர்களை திருடிய ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் பகுதியில் வைத்து சந்தேக நபர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் இவர் வவுனியா செட்டிக்குளத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சந்தேக நபரிடமிருந்து 10 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் 3 சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.



## வவுனியா போக்குவரத்துப் பொலிஸாரால் பாடசாலைகளில் வீதி ஒழுங்கு விதிமுறை







வவுனியா, ஒக். 09

வவுனியா போக்குவரத்து பொலிஸாரால் பாடசாலைகளில் வீதி ஒழுங்கு விதிமுறை தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி ரொஷான் சந்திரசேகர அவர்களவின் எண்ணக்கருவில் வீதி ஒழுங்குகள், வீதி விபத்துக்கள் தொடர்பிலான கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் போக்குவரத்து பொலிஸாரால் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை நேரத்தில் வீதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவது , எந்த வகையான சமிச்சைகளை பயன்படுத்துவது தொடர்பிலான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் பாடசாலை நேரத்தில் அதிகரிக்கும் விபத்துக்களைத்தடுக்கும்முகமாகவேமாணவர்களுக்கு இவந்தப் பயிற்சிகள் வழங்கப்படுவதாக வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி இதன்போது தெரிவித்தார். (100)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.10.2022இல் வெளியிடப்பெற்றது.